தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை :திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்373/மா/2025

நாள்03.09.2026

க.சுரேஷ்பாபு,
சென்னை–600 044. --- முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி.
(2) R. பாலமுருகன்,
சென்னை–600 044. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, கதவு எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவரின்14.10.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 15.10.2025 அன்று பெறப்பட்டு 373/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, கதவு எண்.13 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.க.சுரேஷ் பாபு என்பவர் தனது 14.10.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

“செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி. தாம்பரம் மாநகராட்சி மண்டல அலுவலகம்–1, எல்லைக்குட்பட்ட பம்மல், நாகல்கேணி, காந்தி நகர், அங்கீகரிக்கப்பட்ட மனை எண் 42, கதவு எண் 25, துரைராஜ் தெருவில், வசித்து வரும் திரு.R.பாலமுருகன், த/பெ. ரத்தினம், மாநகராட்சி நிர்வாகத்துறை (சென்னை பெருநகர மாநகராட்சியில்) பணிபுரியும் அரசு ஊழியர் ஆவார்.

திரு.R.பாலமுருகன், த/பெ. ரத்தினம் அவர்கள் மேற்கண்ட 1800 சதுர அடி மனையில் தனது பங்கு 900 சதுர அடியில், 2022 ஆம் ஆண்டு புதியதாக தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தள கட்டிடத்தை சுமார் 2200 சதுர அடியில் கட்டியுள்ளார்.

மேற்காணும் புதிய கட்டிடத்திற்கு திட்ட அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக கட்டியுள்ளார்.கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்டிடம் பயன்பாட்டில் இருந்தும் இதுவரை சொத்துவரி மதிப்பீடு செய்யப்படவில்லை. அதற்கான விண்ணப்பமும் அளிக்கப்படவில்லை. இதன் மூலம் மாநகராட்சிக்கு நேரடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

இச்செயல்கள் கட்டிட மற்றும் வரி சட்டங்களின் மீறலாக இருப்பதோடு, அரசுப் பணியாளரான இவரால் செய்யப்பட்ட கடமையின்மையும் ஒழுக்கக் கேடும் வெளிப்படையாக வெளிப்படுத்துகின்றன.

Violations:

No building plan approval – Contravention of relevant provisions under the Tamil Nadu District Municipalities Act.

Unauthorized construction – Violation of sanctioned building rules and development control regulations.

No Property Tax assessment – For more than two years, causing direct loss to public revenue.

Misuse of official position – Likely abuse of his position as a government servant to evade legal and civic obligations.

Relevant Legal Provisions Violated:

- **Prevention of Corruption Act, 1988 (as amended in 2018):**
  - Section 13(1) (d) – Misuse of official position to cause loss to the government.
  - Section 7 – Public servant taking undue advantage for himself or another person.
- **Tamil Nadu District Municipalities Act:**
  - Unauthorized construction without plan approval violates building rules and tax assessment regulations.
  - Section 250, 252, 253 – Non-assessment of property tax and evasion there of is a punishable offence.

இத்தகைய சட்டவிரோத செயல்கள், குறிப்பாக (மாநகராட்சி நிர்வாகத் துறை / சென்னை பெருநகர மாநகராட்சி) அரசு ஊழியரால் செய்யப்படுவது, சட்டத்தின மீதான மக்களின் நம்பிக்கையையும், பொது பொறுப்பையும் பாதிக்கக் கூடியது.

எனவே, கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(1) சம்மந்தப்பட்ட விதி மீறல் கட்டிடத்தை கள ஆய்வு மேற்கொள்ள உத்தரவு வழங்கவும்.

(2) சொத்து வரி தவிர்ப்பு மற்றும் அதற்கான அபராதத்தைக் கணக்கிட்டு வசூலிக்க உத்தரவு வழங்கவும்.

(3) அரசுப் பதவியின் தவறான பயன்பாடு – சட்ட மற்றும் குடிமைப் பொறுப்புகளைத் தவிர்க்கும் நோக்கில் பதவி துஷ்பிரயோகம் – துறை ரீதியான நடவடிக்கைக்கு உத்தரவு வழங்கவும்.

(4) தவறை அறிந்தும் சக துறை ஊழியரை காப்பாற்றும் நோக்கத்துடன் எனது புகார் மனு மீது இந்நாள் வரை நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்து வந்த தாம்பரம் மாநகராட்சி, மண்டலம்–1, சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க உத்தரவு வழங்கவும்.

நீதி, வெளிப்படைத் தன்மை மற்றும் நம்பகத்தன்மையை நிலைநிறுத்தும் பொருட்டு மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் செயலர் இம்மனுவிற்கு தக்க முக்கியத்துவம் வழங்கி உரிய நடவடிக்கை வேண்டி இந்த மேல்முறையீட்டு மனு தங்களுக்கு பணிந்து அனுப்பப்படுகிறது.''

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 14.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. இந்நிலையில், மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்ட திரு. R. பாலமுருகன் என்பவரின் சார்பாக அவரது வழக்கறிஞர் 08.12.2025 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"Under instructions from my client R. Balamurugan, S/o Late Rathinam, residinhg at Old No.4, New No.25, Duraraj Street, Gandhinagar, Nagalkeni, Chrompet, Chennai-600 044, I am issuing this letter to your good offices.

1. My client expresses that he had become the co-owner of the land and building at No.4, New No.25, Duraraj Street, Gandhinagar, Nagalkeni, Chrompet, Chennai-600 044 by way of a release deed dated 27th July, 2011. The other owner of the property was his co-born brother R. Sureshkumar. His mother Mrs. Maheswari and my sister Chamundeswari had released their respective shares on each having receiving an amount for themselves. My mother is receiving family pension and living on her own.

2. My client expresses that his sister was given in marriage in 2011 on mortgaging the property and he had cleared the mortgage out of his own funds and his mother took all her things and left the house on 7th July, 2025. His brother R. Sureshkumar had also left the houses on 7th July, 2025 along with his mother. His brother R. Sureshkumar is not in good health for about 15 years with psychological problems and he has been at home and under medication. He is not able to move around freely as his mental condition does not permit him to. I was taking care of him till he lived with me.

3. My client expresses that on 08.07.2025 one Mr. DAVID BASKAR had called him and informed him that he is to carry out some plastering work in the house. Mr. David Baskar sent a what's app on 24th July, 2025 and he had sent a reply what's app message. He had sent a what's app reply to Mr. David Baskar wanting Mr. David Baskar to approach the civil court, identify his portion of 900 sq. feet of land with building if any and then come to the property in person to do any work in his portion.

4. This man Mr. David Baskar had been regularly disturbing my client and his wife and he came to know of the purchase of the undivided share of 900 sq. feet from R. Sureshkumar.

5. My client states that on verification he had come to know that Mr. David Baskar S/o Samuel, had purchased the undivided porition of 900 sq. feet out of the entire property measuring 1800 sq. feet on 9th April, 2025 by way of a registered sale deed the same registered as Doc. No: 3253

of 2025 at the Sub Registrar Office at Pammal. In the said sale deed nowhere has it been mentioned that the sale consideration has been paid his brother R. Sureshkumar and the mode of payment of the sale consideration amount to the seller R.Sureshkumar has also not been mentioned. The schedule of the sale deed very clearly expresses that Mr. David Baskar has purchased the undivided portion of 900 sq. feet only. The Hon'ble Apex Court (Supreme Court of India) in the judgement of SK. GOLAM LALCHAND VS NANDU LAW SHAW dated 10.09.2024 has held that a co-owner of a non partitioned property cannot transfer the entire property without getting his share determined and demarcated to bind the other co-owners.

6. My client states that after purchase of the undivided share Mr. David Baskar had put in efforts to disturb the peaceful possession of his property and had started disturbing him and his family causing mental harassment to all in his house. He was forced to lodge a complaint before the jurisdictional Shankar Nagar police station and a CSR was issued to him on 13.07.2025 by way of No:1002/2025 against you unable to bear up with your threats. The police had warned Mr. David Baskar and had advised him to approach the civil court. Mr. David Baskar had instead of approaching the civil court had sent him and his wife a Caveat petitions.

7. My client states now Mr. David Baskar along with his team mate Mr. Suresh Babu has been harassing him in several ways and he is defending himself accordingly. One such move is the letter given to your good offices. He had gained knowledge of the same as the Revenue Inspector, Zone-I Office, The Tambaram Municipal Corporation, Dr. Ambedkar Salai, Brindavan Colony, Pammal, Chennai-600 075 through his advocate. Mr. Suresh Babu the team mate of Mr. David Baskar had sent a letter to his office being the Corporation of Chennai asking for his service details and he did defend himself.

8. My client expresses that Mr. David Baskar has been using the sale deed to disturb him and his family and grab our property. He has now preferred a complaint before your good offices wanting my property to be assessed to property tax as per the construction on site and have a name transfer done to his name as a co-owner. Mr. David Baskar has filed a partition suit and the same has been filed by him very recently and he is awaiting court notice. My advocate had checked and informed him that the suit is O.S. No:877 of 2025. He is to contest the case legally.

9. My client expresses that the Revenue Inspector Mr. Sivaprabhakaran of Zone-1 Office, The Tambaram Municipal Corporation, Dr. Ambedkar Salai, Brindavan Colony, Pammal, Chennai-600 075 has been coming in person wanting me to part with his property document and he is very interested in imposing taxes for the super structure and transferring the taxes into the name of Mr. David Baskar and his name. He expresses that he has his objection to name transfer of the taxes into the name of Mr. David Baskar along with his name as he fears that Mr. David Baskar will

use the same to harass him further. Mr. David Baskar will try to enter the house of mine expressing that he has a right in 50% of the property although it is an undivided share which he had purchased and he also claim that he is paying taxes. He is to contest the partition suit filed by Mr. David Baskar as he said sale deed is null and void as held by the Supreme Court in the above mentioned judgement.

10. My client expresses that this man Mr. David Baskar is not a law abiding citizen and is with a team of people who grab properties from innocent public. Mr. David Baskar, Mr. Suresh Babu and his team are harassing him and his family and he has been preferring complaints for all acts of theirs before the police and other relevant authorities to safe guard our right and interests.

11. My client expresses that he is enclosing documents as proof of the above contents of his and he pleads before this authority to safe his legal interest by passing necessary orders to restrian the Assistant Commissioner Revenue, Tambaram Commissioner Office/Revenue Inspector Officer, of Zone-1 Office, The Tambaram Municipal Corporation, Dr. Ambedkar Salai, Brindavan Colony, Pammal Chennai-600075. He expresses that the Revenue Inspector, Zone-1 Office, the Tambaram Municipal Corporation, Dr. Ambedkar Salai, Brindavan Colony, Pammal, Chennai-600075 has informed him that Mr. David Baskar or some of his associates have preferred a letter before your good offices for assessment of his superstructure which he is ready but the same should not be followed by a name transfer of the taxes into the name of Mr. David Baskar and his.

You are herewith requested Sir to use our good offices to safeguard the legal interest of my client Mr. R. Balamurugan who is the possession of the entire property measuring 1800 sq. feet but the owner of 900 sq. feet undivided share of the property at Old No:4, New No:25, Duraraj Street, Gandhinagar, Nagalkeni, Chrompet, Chennai-600 044 on paper as of now till the outcome of the judgement and decree of the partition suit O.S. No.877 of 2025 filed by Mr. David Baskar as my client is sure to succed in the suit. He has no objection for imposing of taxes for the super structure but he does have an objection to transfer the taxes into the name of Mr. David Baskar and his name as the sale deed of Mr. David Baskar is a null and void sale deed.

4. மனுதாரர் மனு மீதான அறிக்கை மற்றும் மனுதாரரால் புகார் தெரிவிக்கப்பட்ட திரு. R. பாலமுருகன் என்பவர் சார்பாக பெறப்பட்ட வழக்கறிஞரின் கடிதம் ஆகியவற்றின் மீது அறிக்கை அனுப்புமாறு 24.03.2026 நாளிட்ட இம்முறைமன்ற கடிதம் மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது. அறிக்கைகள் பெறாததால் 07.05.2026 நாளிட்ட நினைவூட்டு கடிதம் தாம்பரம் மாநகராட்சி ஆணையருக்கு அனுப்பப்பட்டது.

5. இந்நிலையில், தாம்பரம் மாநகராட்சிஆணையாளர் தனது 14.05.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 4939/2025/அ1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“திரு. சுரேஷ்பாபு என்பவரின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனுவில் தாம்பரம் மாநகராட்சி மண்டலம்–1, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, க. எண் 25ல் உள்ள திரு. R. பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்திற்கு சொத்துவரி விதிக்கப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.அதன் பேரில் மேற்படி கட்டிடத்தினை வருவாய் பிரிவு மூலம் நேராய்வு செய்யப்பட்டு அளவீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வலுவலக இதே எண்ணுள்ள அறிவிப்பு மேற்கண்ட கட்டிடத்திற்கு உண்டான தற்போது உரிமையாளரின் பத்திரம் நகல், கட்டிட அனுமதி மற்றும் இதர ஆவணங்கள் அளிக்க கோரி கடிதம் 18.11.2025 அனுப்பப்பட்டதில், இதுவரை எவ்வித ஆவணமும் திரு.R.பாலமுருகன் அவர்களால் அளிக்கப்படவில்லை. புகார் தெரிவிக்கப்படும் கதவு எண் 25ல் திரு.R.பாலமுருகன் (ம) சுரேஷ்குமார் என்பவரின் பெயரில் சொத்து வரி விதிப்பு எண்.009/011/901620–ன்படி கடந்த 31.03.2026 முடிய நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது.

திருமதி ஷியாமளா வழக்கறிஞர் கடிதத்துடன் வரப்பெற்ற பத்திரநகல் திரு.S. டேவிட் பாஸ்கர் என்பவரின் மேற்கண்ட 1800 சதுரடி கொண்ட மனையில் பிரியபடாத 900 சதுரடி கொண்ட மனையும் (ம) அதில் கட்டியுள்ள வீடு உள்ளதாக பத்திர பதிவு எண் 3253/2025 நாள் 09.04.2025ல் பத்திரம் நகல் பெறப்பட்டுள்ளது.

கதவு எண் 25ல் தெரிவிக்கப்பட்ட கட்டிடம் (ம) புதியதாக கட்டப்பட்ட கட்டிடத்தின் உரிமையாளர் பெயரில் உள்ள பத்திரம் மற்றும் இதர ஆவணங்கள் அவர்களின் பாகத்திற்கு உண்டான சதுரடி விவரம் மற்றும் OS. No.877/2025ன்படி நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதால் தொடரப்பட்ட வழக்கில் தீர்ப்புரை வரும் பட்சத்தில் ஏற்கனவே உள்ள சொத்துவரி, கூடுதல் வரிவிதிப்பு அல்லது புதிய சொத்துவரி விதிப்பு செய்ய தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை மேற்கொள்ள ஏதுவாக இருக்கும் என்ற விவரம் பணிந்து தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.”

6. மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 18.06.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 01.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

7. மனுதாரர் 14.06.2026 நாளிட்ட தன்னுடைய மின்னஞ்சலில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

“I am the appellant in the above mentioned appeal petition. The matter is posted for hearing on 18.06.2026.

Due to an urgent and unavoidable work commitment requiring me to travel to another state, I am unable to appear before the Hon'ble Forum on the scheduled date.

Therefore, I humbly request that the hearing scheduled on 18.06.2026 may kindly be adjourned and the matter may be posted for the following month or on any other convenient date as deem fit by this Hon'ble Forum.

I shall be greatful for your kind consideration of this request.”

8. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் கண்காணிப்பாளர் 18.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"மேற்படி மனுதாரர் குறிப்பிட்டுள்ள திரு.R.பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தினை வருவாய் பிரிவு மூலம் நேராய்வு செய்து அளவீடு செய்யப்பட்டு தாம்பரம் மாநகராட்சி மூலம் அறிவிப்பு கடிதம் 18.11.2025 அன்று வழங்கப்பட்டது. மேலும் கட்டிடத்திற்கு உண்டான பத்திரம் நகல், கட்டிட அனுமதி மற்றும் இதர ஆவணங்கள் அளிக்க கோரி கடிதம் 18.11.2025ல் மனுதாரருக்கு அனுப்பப்பட்டது. இந்நாள் வரை எவ்வித ஆவணமும் அளிக்கப்படவில்லை. கதவு எண்.25ல் வசிக்கும் திரு.R.பாலமுருகன் (ம) சுரேஷ்குமார் என்பவரின் பெயரில் சொத்து வரி விதிப்பு எண்.009/011/901620–ன்படி கடந்த 31.03.2026 முடிய நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது.

மேற்படி மனையில் 2023ல் புதியதாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், கட்டிடத்திற்கு வரி விதிப்பு செய்ய கடந்த 18.11.2025ல் அறிவிப்பு அனுப்பப்பட்டு கட்டிட உரிமையாளரால் பெறப்படாமல் திரும்ப தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்தில் பெறப்பட்டது.

மேற்கண்ட மனை எண்ணில் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு கட்டிட அனுமதி வழங்கப்பட்டதா என்பது தொடர்பாக தாம்பரம் மாநகராட்சியில் நகரமைப்பு பிரிவில் பணியாற்றும் அலுவலரிடம் கேட்டு அடுத்த விசாரணையில் தெரிவிக்கிறேன்.

மேற்படி மனையில் திரு.டேவிட் பாஸ்கர் என்பவர் பிரிக்கப்படாத மனையில் பத்திர பதிவு செய்துள்ளதாக அறியப்படுகிறது.

கட்டிட உரிமையாளர் திரு.பாலமுருகன் மற்றும் பிரிக்கப்படாத மனையில் பத்திர பதிவு செய்துள்ள திரு.டேவிட் பாஸ்கர் ஆகியோர்களிடம் ஆவணங்கள் பெற்று அதன் அடிப்படையில் உரிய சொத்து வரி விதிக்க சட்ட பூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்."

9. இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பாக அவரது மனைவி திருமதி P.சுதா என்பவர் 18.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, பழைய கதவு எண் 4, புதிய கதவு எண் 25. சர்வே எண் 102/3, 193/3–ல் அமைந்துள்ள பிரிக்கப்படாத 1800 சதுர அடி மற்றும் வீடு எனது கணவர் மற்றும் அவரது தம்பிக்கு சொந்தமானதாகும். எனது கணவரின் தம்பி திரு. R.சுரேஷ்குமார் மனநிலை சரியில்லாத காரணத்தினால் மேற்கண்ட பிரிக்கப்படாத மனையில் கட்டிய வீட்டிற்கு அவருடைய கையொப்பம் தேவைப்பட்டதால் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் அளிக்க இயலவில்லை.

எனது கணவரின் தம்பி திரு. R.சுரேஷ்குமார், மேற்கண்ட பிரிக்கப்படாத சொத்தில் 900 சதுர அடி திரு. டேவிட் பாஸ்கர் என்பவருக்கு ஆவண எண் 3253/2023 மூலம் விற்றுவிட்டார். இது குறித்து வழக்கு எண் O.S. No.877 of 2025 திரு.டேவிட் பாஸ்கர் என்பவரால் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

10. மனுதாரர் 14.06.2026 நாளிட்ட மின்னஞ்சலில் கோரியவாறும் மற்றும் 18.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில்,இரண்டாம் எதிர்மனுதாரர் வீட்டின் கதவு எண் 25–ல் கட்டப்பட்ட கட்டிடத்திற்கு அனுமதி வழங்கப்பட்டதா என்பது குறித்து அடுத்த விசாரணையில் தெரிவிக்கப்படும் என முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான கண்காணிப்பாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்திருந்ததாலும்,மனுதாரரின் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.07.2026 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு

ஆஜராகுமாறு 23.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டு, இரண்டாம் எதிர்மனுதாரருக்கு நகலிடப்பட்டது.

11. மனுதாரர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 08.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பம்மல், நாகல்கேணி, காந்தி நகர், மனை எண்.42, கதவு எண்.25, துரைராஜ் தெருவில் வசித்து வரும் திரு.R.பாலமுருகன், த/பெதிரு. ரத்தினம் மாநகராட்சி நிர்வாகத்துறை சென்னை பெருநகர மாநகராட்சியில் பணிபுரிபவர்.

மேற்கண்ட 1800 சதுரடி மனையில் திரு.R.பாலமுருகன் 900 சதுரடியில், 2022ம் ஆண்டு புதியதாக தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடத்தினை சுமார் 2200 சதுரடியில் திட்ட அனுமதி பெறாமல் சட்ட விரோதமாக கட்டியுள்ளார்.

மேற்கண்ட கட்டிடத்திற்கு 28.07.2025 அன்று சொத்து வரி மதிப்பீடு மேற்கொள்ளப்படாதது குறித்து எழுத்து பூர்வமாக புகார் அளித்தேன்.அதனை தொடர்ந்து 07.08.2025 அன்று மின்னஞ்சல் மூலமாக புகார் அளித்தேன். நடவடிக்கை எடுக்காததால், 25.08.2025 அன்று மத்திய அரசின் CPGRAMS தளத்தில் புகார் பதிவு செய்தேன். இப்புகார் 14.10.2025 அன்று தாம்பரம் மாநகராட்சிக்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாற்றப்பட்டது. மேலும், 28.10.2025 மற்றும் 06.11.2025 ஆகிய தேதிகளில் நினைவூட்டு மனுக்களை சமர்ப்பித்தேன்.

இதன் தொடர்ச்சியாக 07.11.2025 அன்று தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட கட்டிட இடத்திற்கு சென்று ஆய்வு மேற்கொண்டனர். ஆய்வில் விதி மீறல்கள் கண்டறியப்பட்டன. இதை குறிப்பிட்டு CPGRAMS புகார் மனு முடிக்கப்பட்டது. ஆனால் எவ்வித பதிலும் எனக்கு அளிக்கப்படவில்லை.அதனால் 13.12.2025 அன்று CPGRAMS தளத்தில் இரண்டாவது புகார் அளித்தேன். அப்புகார் எனது புகாரின் பொருளுடன் தொடர்பு இல்லாத தாம்பரம் மாநகராட்சி கடித எண்.ந.க.எண்.1408/2023/எப்1 நாள் 10.02.2026 மேற்கொள் காட்டி முடித்து வைக்கப்பட்டது. இதன் மூலம் தாம்பரம் மாநகராட்சி எனது புகாரின் உண்மை தன்மையை பரிசீலிக்கவில்லை என்பது தெரிய வருகிறது.இதன் நகல்களை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்டிடம் பயன்பாட்டில் இருந்தும் இதுவரை சொத்து வரி மதிப்பீடு செய்யப்படவில்லை. விண்ணப்பமும் வழங்கவில்லை. இதனால் மாநகராட்சிக்கு நேரடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

(1) சம்மந்தப்பட்ட விதி மீறல் கட்டிடத்தை கள ஆய்வு செய்ய வேண்டும்.
(2) சொத்து வரி தவிர்ப்பு மற்றும் அதற்கான அபராதத்தைக் கணக்கிட்டு வசூலிக்க வேண்டும்.
(3) தவறை அறிந்தும் சக துறை ஊழியரை காப்பாற்றும் நோக்கத்தில் எனது புகார் மனு மீது இந்நாள் வரை நடவடிக்கை எடுக்காமல் தவிர்த்து வந்த தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 1–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எனது மேற்கண்ட கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

12. முதலாம்எதிர்மனுதாரர் தரப்பில் தாம்பரம் மாநகராட்சியின் உதவிப் பொறியாளர் (திட்டம்)மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோர் 08.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி

அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

“மனுதாரர் தெரிவித்துள்ள செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் நாகல்கேணி காந்தி நகர், துரைராஜ் தெரு, மனை எண்.42, கதவு எண்.25ல் அமைந்துள்ள கட்டிடத்திற்கு தாம்பரம் மாநகராட்சியால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை. இது குறித்து உரிய சட்ட பூர்வ நடவடிக்கை தாம்பரம் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் தற்போது மேற்கண்ட பிரிக்கப்படாத மனையின் ஒரு பகுதியை கிரையம் செய்த சென்னை – 43, பல்லாவரம் நேரு நகர், பரசுராமன் தெரு, கதவு எண்.5ல் வசிக்கும் திரு.எஸ்.டேவிட் பாஸ்கர் தாம்பரம் மாநகராட்சிக்கு தான் கிரையம் செய்த மேற்கண்ட கட்டிடத்திற்கு சொத்துவரியை நிர்ணயம் செய்யுமாறு 03.07.2026 அன்று மனு சமர்ப்பித்துள்ளார். அம்மனு மீது தாம்பரம் மாநகராட்சியின் சட்ட ஆலோசகரிடம் கருத்துரு பெற்று மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.”

13. இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பாக அவரது மனைவி திருமதி P.சுதா மற்றும் அவரின் வழக்கறிஞர் ஆகியோர் 08.07.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்கள்:–

“எனது மனுதாரர் வீடு அமைந்துள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ள அனைத்து வீடுகளுமே அனுமதியின்றி கட்டப்பட்ட வீடுகளாகும். புகார்தாரர் திரு.க.சுரேஷ்பாபு என்பவர் மனுதாரரின் கணவரின் தம்பி திரு.ஆர்.சுரேஷ்குமார் அவர்களிடமிருந்து பிரிக்கப்படாத சொத்தில் 900 சதுர அடியை கிரையம் பெற்ற திரு.டேவிட்பாஸ்கர் என்பவருடன் கூட்டு சேர்ந்து எங்கள் வீட்டினை அபகரிக்க முயற்சி செய்கிறார். உதாரணமாக திரு.டேவிட்பாஸ்கர் கிரையம் பெற்ற ஆவணத்தில் மனுதாரரின் கணவரின் தம்பியான திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவரின் பெயருக்கு புகார்தாரர் திரு.க.சுரேஷ்பாபு என்பவரின் கைபேசி எண்.9840913120ஐ வழங்கியுள்ளார்.

அனுமதியில்லாமல் கட்டப்பட்டதாக தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்பட்ட தாக்கீது தொடர்பாக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவு 80A–ன்படி அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளோம். அதன் நகலினை இரண்டு நாட்களில் இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு சமர்ப்பிக்கின்றோம்.

மேலும், மேற்கண்ட பிரிக்கப்படாத சொத்தில் 900 சதுர அடி கிரையம் பெற்ற திரு.எஸ்.டேவிட்பாஸ்கர் என்பவரால் வழக்கு எண்.O.S. No.877 of 2025செங்கல்பட்டு மாவட்டம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்ற விவரத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

மனுதாரரின் கணவரின் மனநிலை சரியில்லாத தம்பியான திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவரை ஏமாற்றி கிரையம் பெற்ற திரு.எஸ்.டேவிட்பாஸ்கர் மற்றும் புகார்தாரர் திரு.க.சுரேஷ்பாபு ஆகியோர் கூட்டாக சதியில் ஈடுபட்டு எங்களது வீட்டினை முறையற்ற வகையில் கையகப்படுத்தும் நோக்கில் இம்முறை மன்ற நடுவத்திற்கு அளித்துள்ள மனுவினை தள்ளுபடி செய்யுமாறு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.”.

14முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை,உதவிப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் ஆஜரான இரண்டாம் எதிர்மனுதாரரின் மனைவி திருமதி P.சுதா மற்றும் அவருக்கு உதவியாக ஆஜரான வழக்கறிஞர் வாக்குமூலங்கள்

ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பம்மல், நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, மனை எண்.42, கதவு எண்.25–ல் வசித்து வரும் திரு.R.பாலமுருகன் என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சி நிர்வாகத்துறையில் பணிபுரிகிறார் என்பதும், மேற்கண்ட முகவரியில் அமைந்துள்ள 1800 சதுரடி மனையில் திரு.R.பாலமுருகன் என்பவர் 900 சதுரடியில், 2022ம் ஆண்டு புதியதாக தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடத்தினை சுமார் 2200 சதுரடியில் திட்ட அனுமதி பெறாமல் கட்டியுள்ளார் என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு சொத்து வரி மதிப்பீடு மேற்கொள்ளப்படாதது குறித்து எழுத்து பூர்வமாக புகார் அளித்ததை தொடர்ந்து மின்னஞ்சல் மூலமாகவும் மனுதாரரால் புகார் அளிக்கப்பட்டது என்பதும், இவற்றின் மீது தாம்பரம் மாநகராட்சியால் நடவடிக்கை எடுக்காததால், மத்திய அரசின் CPGRAMS தளத்தில் பதிவு செய்யப்பட்ட புகார் தாம்பரம் மாநகராட்சிக்கு நடவடிக்கை எடுப்பதற்கு மாற்றப்பட்டது என்பதும், இதுகுறித்து நினைவூட்டுகள் மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டது என்பதும், இதன் தொடர்ச்சியாக தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள் மேற்கண்ட கட்டிடத்தில் ஆய்வு மேற்கொண்டதில், விதி மீறல்கள் கண்டறியப்பட்டன என்பதும், இதை குறிப்பிட்டு CPGRAMS புகார் மனு முடிக்கப்பட்டு, எவ்வித பதிலும் தனக்கு அளிக்கப்படவில்லை என்பதும், அதனால் CPGRAMS தளத்தில் அளிக்கப்பட்ட இரண்டாவது புகாரின் பொருளுடன் தொடர்பு இல்லாத தாம்பரம் மாநகராட்சி கடிதத்தினை மேற்கொள் காட்டி முடித்து வைக்கப்பட்டது என்பதும், இதன் மூலம் தாம்பரம் மாநகராட்சி எனது புகாரின் உண்மை தன்மையை பரிசீலிக்கவில்லை என்பது தெரிய வருகிறது என்பதும், இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக அந்தக் கட்டிடம் பயன்பாட்டில் இருந்தும் இதுவரை சொத்து வரி மதிப்பீடு செய்யப்படவில்லை, விண்ணப்பமும் வழங்கவில்லை என்பதும், இதனால் மாநகராட்சிக்கு நேரடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது என்பதால், சம்மந்தப்பட்ட விதி மீறல் கட்டிடத்தை கள ஆய்வு செய்யவும், சொத்து வரி தவிர்ப்பு மற்றும் அதற்கான அபராதத்தைக் கணக்கிட்டு வசூலிக்கவும், தனது புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காத தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1–ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ளதாம்பரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பம்மல், நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, மனை எண்.42, கதவு எண்.25ல் பிரிக்கப்படாத 1800 சதுரடியில், 900 சதுரடியில் உள்ள திரு.R.பாலமுருகன் என்பவருக்கு சொந்தமான கட்டிடத்தினை வருவாய் பிரிவு மூலம் நேராய்வு செய்து அளவீடு செய்யப்பட்டு தாம்பரம் மாநகராட்சி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டது என்பதும், கட்டிடத்திற்கு உண்டான பத்திரம் நகல், கட்டிட அனுமதி மற்றும் இதர ஆவணங்களை அளிக்க கோரி மனுதாரருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்பதும், இந்நாள் வரை எவ்வித ஆவணமும் அளிக்கப்படவில்லை என்பதும், மேற்கண்ட முகவரியில் உள்ள கதவு எண்.25ல் வசிக்கும் திரு.R.பாலமுருகன் (ம) சுரேஷ்குமார் ஆகியோரின் பெயரில் சொத்து வரி விதிப்பு எண்.009/011/901620–ன்படி கடந்த 31.03.2026 முடிய சொத்துவரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி மனையில் 2023ல் புதியதாக கூடுதல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால், கட்டிடத்திற்கு வரி விதிப்பு செய்ய அனுப்பப்பட்ட அறிவிப்பினை கட்டிட உரிமையாளரால் பெறப்படாமல் தாம்பரம் மாநகராட்சி அலுவலகத்திற்கு திரும்பி விட்டது என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு தாம்பரம் மாநகராட்சியால் எவ்வித கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை என்பதும், இதுகுறித்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மேற்படி முகவரியில் பிரிக்கப்படாத மனையின் ஒரு பகுதியை கிரையம் செய்த திரு.டேவிட் பாஸ்கர் என்பவர் தன்னுடைய கட்டிடத்திற்கு சொத்துவரியை நிர்ணயம் செய்யுமாறு மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தாம்பரம் மாநகராட்சி சட்ட ஆலோசகரிடம் கருத்து பெற்று

மேல்நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும் முதலாம் எதிர்மனுதாரரான தாம்பரம் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் (திட்டம்) மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

சென்னை–600 044, குரோம்பேட்டை, நாகல்கேணி, காந்தி நகர், துரைராஜ் தெரு, பழைய கதவு எண் 4, புதிய கதவு எண் 25. சர்வே எண் 102/3, 193/3–ல் அமைந்துள்ள பிரிக்கப்படாத 1800 சதுர அடி மற்றும் வீடு தனது கணவர் மற்றும் அவரது தம்பிக்கு சொந்தமானதாகும் என்பதும், தனது கணவரின் தம்பி திரு. R.சுரேஷ்குமார் மனநிலை சரியில்லாத காரணத்தினால் மேற்கண்ட பிரிக்கப்படாத மனையில் கட்டிய வீட்டிற்கு அவருடைய கையொப்பம் தேவைப்பட்டதால் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் அளிக்க இயலவில்லை என்பதும், தனது கணவரின் தம்பி திரு. R.சுரேஷ்குமார், மேற்கண்ட பிரிக்கப்படாத சொத்தில் 900 சதுர அடியினை திரு. டேவிட் பாஸ்கர் என்பவருக்கு விற்றது குறித்து,திரு. டேவிட் பாஸ்கர் என்பவரால் தொடரப்பட்டவழக்கு எண் O.S. No.877 of 2025 நிலுவையில் உள்ளது என்பதும், இரண்டாம் எதிர்மனுதாரர் வீடு அமைந்துள்ள பகுதியில் கட்டப்பட்டுள்ள அனைத்து வீடுகளுமே அனுமதியின்றி கட்டப்பட்ட வீடுகளாகும் என்பதும்,மனுதாரர் திரு. க.சுரேஷ்பாபு என்பவர் தனது கணவரின் தம்பி திரு.ஆர்.சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து பிரிக்கப்படாத சொத்தில் 900 சதுர அடியை கிரையம் பெற்ற திரு.டேவிட்பாஸ்கர் என்பவருடன் கூட்டு சேர்ந்து தங்கள் வீட்டினை அபகரிக்க முயற்சி செய்கிறார் என்பதும், அனுமதியில்லாமல் கட்டப்பட்டதாக தாம்பரம் மாநகராட்சியால் வழங்கப்பட்ட தாக்கீது தொடர்பாக தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்பு சட்டம், 1971–ன் பிரிவு 80A–ன்படி அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் வழக்கறிஞர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றில் இருந்து அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர்தனது மனுவில் குறிப்பிட்டுள்ள,செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் நாகல்கேணி காந்தி நகர், துரைராஜ் தெரு, மனை எண் 42, கதவு எண் 25ல் இரண்டாம் எதிர்மனுதாரரால் கட்டப்பட்டுள்ள கட்டிடம் அமைந்துள்ள பிரிக்கப்படாத மனையிலிருந்து 900 சதுர அடி கிரையம் பெற்ற திரு. டேவிட்பாஸ்கர் என்பவரால் வழக்கு எண். O.S. No.877 of 2025 செங்கல்பட்டு மாவட்டம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது என்று இரண்டாம் எதிர்மனுதாரர் சார்பாக அவரது மனைவி திருமதி P.சுதா என்பவரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காண் சூழ்நிலையில், வழக்குகள் நிலுவையில் உள்ள இனங்கள் குறித்து 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)–ல் நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது கருத்தில் கொள்ளப்பட்டது:–

The Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10 (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரர் புகார் தொடர்பான மேற்கண்டபிரிக்கப்படாத மனையிலிருந்து 900 சதுர அடி கிரையம் பெற்ற திரு. டேவிட்பாஸ்கர் என்பவரால் செங்கல்பட்டு மாவட்டம் முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு எண் O.S. No.877 of 2025–ல் தொடரப்பட்ட வழக்கு நிலுவையில் உள்ளதால், மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல் நடவடிக்கை எடுக்க இயலாது என முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 03–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு.க.சுரேஷ் பாபு,
எண் 13 துரைராஜ் தெரு,
காந்தி நகர், நாகல் கேணி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
28 முத்துரங்கம் தெரு,
தாம்பரம் மேற்கு, சென்னை–600 045.

(3) திரு. R.பாலமுருகன்,
பழைய கதவு எண் 4, புதிய கதவு எண் 25,
துரைராஜ் தெரு, நாகல்கேணி,
குரோம்பேட்டை, சென்னை–600 044.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.